2002 ஏப்ரல் 12]

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 127, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

127—

மேல்நிலைப் பள்ளி

***10451—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த, வரும் கல்வி ஆண்டில் கருத்துரு பெறப்பட்டால், அரசினுடைய நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

திரு. எம்.எஸ். சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கடவுள் முருகன் வள்ளியை மணம் முடித்த இடமான வள்ளிமலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தினால், வள்ளிமலை மாண்புமிகு அம்மாவின் புகழ்பாடும் ஸ்தலமாகவும் மாறும். மேலும், இப்பள்ளியில் நான் படித்தவன் என்கின்ற காரணத்தினால் ஒன்றைச் சொல்கிறேன். இந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள், 10ஆம் வகுப்பில் கடந்த ஆண்டு 78 சதவிகிதம் பேர் தேர்வு பெற்றிருக்கிறார்கள். மேற்படிப்பிற்காக இவர்கள் அருகில் உள்ள பொன்னை அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பின்னம்பள்ளி மேல்நிலைப் பள்ளியிலும் சென்று படிக்க வேண்டிய நிலை இருக்கின்றது. கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் ப்யணம் செய்து படிக்க வேண்டிய சூழ்நிலையில் அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் இருந்து வருகின்றார்கள். ஏழை விவசாயிகள் நிறைந்த பகுதியான அந்தக்

கிராமத்தில் இருக்கின்ற மாணவ, மாணவிகள் அங்கே சென்று படிப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், இதயதெய்வம் டாக்டர் மாண்புமிகு அம்மாவின் அரசானது—சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்களை எல்லாம் இன்றைக்கு பெரிய நிலைக்கு உருவாக்கி வருகின்ற இந்தக் காலகட்டத்தில்—எங்களுடைய பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர இந்த நிதி ஆண்டில் ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், புரட்சித் தலைவி அரசானது கிராமப்புறங்களுக்கு நல்ல கல்வியைத் தர வேண்டும் என்பதற்காக, அந்த மாணவர்களுக்கு உதவியாக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக, தேர்தல் அறிக்கையிலே 'படிப்படியாக அனைத்து உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்குவோம்' என்று இந்த அரசு வாக்குறுதி தந்திருக்கிறது. அதற்கேற்ப சென்ற ஆண்டில் இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவுக்கு 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியிருக்கிறது. இதுபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய பகுதியான வள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதில் சில வரைமுறைகள் இருக்கின்றன. ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்றால், என்னென்ன செய்ய வேண்டுமென்று வரைமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, பொதுமக்களுடைய பங்குத் தொகையான ரூபாய் 2 இலட்சம் கட்ட வேண்டும். எங்களுக்குத் தெரிந்த புள்ளிவிவரத்தின்படி, இந்தப் பள்ளியின் சார்பில் பொது மக்களிடமிருந்து ரூபாய் 2 இலட்சம் பெற்று வைப்பு நிதியாக இதுவரையில் செலுத்தப்படவில்லை. இரண்டாவது, அங்கே 10ஆம் வகுப்பில் 100 மாணவர்களுக்குக் குறையாமலும், அதற்கு மேலும் இருந்தால், அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கலாம் என்ற ஒரு விதிமுறை இருக்கிறது. ஆனால், இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், 80 மாணவர்கள் இருக்கின்றார்கள்.. இருப்பினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை இந்த அரசானது கனிவுடன் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.